சொல்லும்போது இதுபோன்ற மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு. ஆயினும் இந்த இரண்டு பெயரும் பொருத்தமாக இல்லை, நன்றாகவும் இல்லை. ஆகையால் அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும்; மாற்றியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இருக்கும் பெயரை மாற்றுவது பொருத்தமுடையதாக இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருத்தமாக இருக்காது என்று கருதுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பெயரை 'மதிகெட்டான்' என்று இருப்பதை மாற்றி அமைத்துவிடலாம். அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தொப்பையாறு அணைக்கட்டுத் திட்டம்

*576 வினா—**திரு. எம். பரமசிவம்**: மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தொப்பையாறு அணைக்கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொப்பையாறு அணைக்கட்டுத் திட்ட அமைப்பும் மதிப்பீடும், திருச்சிராப்பள்ளி ஆய்வு மேற்பார்வைப் பொறியாளரால் மறுஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. திட்டம் முடிவாகப் பரிசிலிக்கப்பட்டதும் முழுக் குறிப்புகள் தெரியவரும்.

பல்லடம் சாலை, ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

* 577 வினா—**திரு. சு. துரைசாமி**: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்தப் பாதை மிகக் குறுகலாக இருப்பதன் காரணமாகப் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, அதை அகலப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற சாலை இப்போது 42 அடி அகலம் இருக்கிறது. சாலைக்கு இருபக்கங்களிலும் கட்டடங்கள் இருப்பதால் மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறிக் கொள்கிறேன்.